DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Assistant Sessions Judge, Gingee

| | |
|---|---|
| Sessions | SC Case No. 125/2022 |
| Deposition of Witness for | Prosecution<br>Defence<br>Court |
| Name | **PW – 2 அமீர் பாஷா** |
| Father's Name | ஷரீப் |
| Village | மேல்களவாய் |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 27 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969. On 15/11/2024

**<u>முதல் விசாரணை</u>**

நான் செஞ்சியிலுள்ள எஸ்.டி கொரியரில் வேலைபார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எங்களது உறவினர். அ.சா.1 எனது அண்ணன். உங்கள் அண்ணன் எதற்காக புகார் என்று தெரியுமா என்றால் தெரியும். 2 வருடத்திற்கு முன்பு புகார் கொடுத்தார். குடும்ப பிரச்சனை காரணமாக புகார் கொடுத்தார். எனக்கும், என் மனைவிக்கும் பிரச்சனை. எங்கள் இருவருக்கும் குழந்தை இல்லை என்பதால் பிரச்சனை அதனால் என் மனைவி கோபித்து கொண்டு அவரது அம்மாவீட்டிற்கு சென்றுவிட்டார். அவரது அம்மா வீட்டிற்கு சென்று அழைத்தபோது அவர் வரமாட்டேன் என்று கூறிவிட்டதால் நான் சென்னைக்கு சென்றுவிட்டேன். அதன்பிறகு நான் பிரச்சனை செய்வதாக ஆஜர் எதிரிகளிடம் சென்று கூறியுள்ளார்.

எதிரிகள் எங்கள் வீட்டிற்கு பஞ்சாயத்து பேச வந்தார்கள். வந்து எங்களிடம் பேசாமல் எங்களை அடித்து, வீட்டை எல்லாம் உடைத்துவிட்டார்கள். எங்களை அடித்துவிட்டு எங்களுக்கு முன்பே போய் புகார் கொடுத்துவிட்டார்கள். எதிரிகள் எங்களை அடித்ததை நான் வீடியோ எடுத்து பேஸ்புக்கில் போட்டேன். அபுபக்கர் என்னை அசிங்க அசிங்கமாக பேசி ஏண்டா பேஸ்புக்கில் போட்டாய் எதுவாக இருந்தாலும் வீட்டிற்கு வா என வரசொன்னார். அதன்பிறகு நானும், என்

அண்ணனும் இருசக்கர வாகனத்தில் தனிதனியாக சென்றோம். நாங்கள் போனவுடன் எதிரிகளும், அவர்களது சொந்த பந்தங்களும் சுற்றி வளைத்தார்கள். அதன்பிறகு இரும்பு ராடு வைத்து என் தலையில் அடித்தார்கள். அடித்தவுடன் நான் சிறுது தூரம் ஓடினேன் பின் மயக்கமாகி விழுந்துவிட்டேன்.

என் அண்ணனை அடித்தவுடன் அவர் எங்கள் வீட்டிற்கு சென்றுவிட்டார். மயங்கிகிடந்த என்னை கட்டுகல் தூக்கி வலது காலில் போட்டார்கள் இரும்பு ராடால் தாக்கினார்கள் நான் வலதுகையால் தடுத்தேன். வலது கை உடைந்துவிட்டது. என்னுடைய செல்போனை எடுத்து கல் வைத்து உடைத்துவிட்டார்கள். என் அண்ணனின் மனைவி முசரத் பேகம் என்பவர் நடராஜ் எஸ்.ஐ போன் செய்து அவர் சம்பவம் பற்றி சொன்னவுடன் சம்பவ இடம் வந்துவிட்டார். 108 ஆம்புலன்ஸ் வந்தவுடன் நடராஜ் எஸ்.ஐ தான் வண்டியில் ஏற்றி அனுப்பிவிட்டார். அதன்பிறகு செஞ்சி அரசு மருத்துவமனைக்கு வந்தோம். தலையில் காயம்பட்டதால் இங்கு சிகிச்சை அளிக்கமுடியாது என்று கூறி முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். அங்கு எனக்கு 13 தையல் போடப்பட்டது.

என் அண்ணனுக்கு லேசான காயம் தான் ஏற்பட்டது. முதல்முறை பஞ்சாயத்து பேசவந்தபோது என் அண்ணனின் மாமனாரை தாக்கி கையை உடைத்துவிட்டார்கள். அண்ணன் 3 நாட்களில் டிஸ்சார்ஜ் ஆகிவந்துவிட்டார். என்னை 15 நாட்கள் கழித்து டிஸ்சார்ஜ் செய்தார்கள். உங்கள் அண்ணன் புகார் கொடுத்தபிறகு செஞ்சி போலிசார் விசாரித்தார்களா என்றால் செஞ்சி போலிசார் நான் குணமாகி நடக்க ஆரம்பித்தபோது காவல்நிலையம் வரசொல்லி விசாரித்தார்கள். சம்பவம் சம்மந்தமாக என் அண்ணன் புகார் கொடுத்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

உங்களுக்கும் உங்கள் மனைவிக்கும் குடும்ப பிரச்சனைசம்மந்தமாக உங்கள் மனைவி மரக்காணம் அருகே கூனிமேடு என்ற இடத்தில அவரது தாயார் வீட்டில் வசித்துவந்தார். 6 மாத காலமாக நாங்கள் பிரிந்து வாழ்ந்து வந்தோம். 6 மாத காலம் பிரிநது வாழ்ந்து வந்த நிலையில் உங்கள் மனைவியுடன் சேர்ந்து வாழவேண்டி சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளீர்களா என்றால் இல்லை. உங்கள் அண்ணன் மாமனாரை எதிரிகள் தான் கையை உடைத்துவிட்டார்கள் என்று காவல்நிலையத்தில் நீங்களோ (அ) உங்கள் அண்ணனோ புகார் கொடுத்தீர்களா என்றால் புகார் கொடுத்தோம். அது

சம்மந்தமாக சிகிச்சை எடுத்துகொண்டதற்கான வீடியோ ஆதாரங்களோ, ஆவணங்களோ, புகாரோ (அ) முதல் தகவல் அறிக்கையோ சொன்னீர்களா என்றால் இல்லை. அது சம்மந்தமாக போலிசார் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்தார்களா என்றால் இல்லை. எதிரிகள் 3 பேரையும், என் அண்ணன், என் அண்ணனின் மச்சான் முபாரக் கடலூர் மத்தியசிறையில் வைத்திருந்தார்கள்.

மேற்படி சங்கதி அப்பட்டமான பொய் என்றால் சரியல்ல. சுமார் 2 வருடங்களுக்கு முன்பு எதிரிகள் உங்கள் வீட்டிற்கு பஞ்சாயத்து பேசவந்தபோது உங்கள் அனைவரையும் அடித்ததாகவும், வீட்டை உடைத்ததாகவும் எதிரிகள் மீது காவல்நிலையத்தில் யாராவது புகார் கொடுத்தீர்களா என்றால் இல்லை. அதனால்தான் அவர்கள் தாக்கியதை பேஸ்புக்கில் போட்டேன். நீங்கள் நீதித்துறை என்றும், என் உரிமை என்குரல் என்றும் பேஸ்புக்கில் ஐடி வைத்துள்ளீர்களா என்றால் என் உரிமை, என் குரல் என்று மட்டும் ஐடி வைத்துள்ளேன். பேஸ்புக்கில் போட்டதால் அது சம்மந்தமாக பேசுவதற்காக அபுபக்கர் அவர் வீட்டிற்கு அழைத்ததாக கூறுவது அப்பட்டமான பொய் என்றால் சரியல்ல.

நீங்களும், உங்கள் அண்ணனும் தனிதனியாக இருசக்கர வாகனத்தில் எதிரிகளை தாக்குவதற்காகத்தான் நீங்கள் திட்டமிட்டு அங்கு சென்றுள்ளீர்கள் என்றால் சரியல்ல. உங்களுக்கும் உங்கள் அண்ணனுக்கும் இரும்பு ராடால் தலையில் அடித்து ஏற்பட்ட காயத்திற்கு எதிரிகளுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் மயங்கிய நிலையில் எதிரிகள் உங்கள் செல்போனை கல்லை வைத்து உடைத்ததை போலிசாரிடம் ஒப்படைத்தீர்களா என்றால் இல்லை. மயங்கிய நிலையில் கட்டுகல் வைத்து வலதுகாலில் போட்டார்கள் என்றும், இரும்புராடால் தாக்கும்போது வலதுகையால் தடுத்ததால் கை உடைந்துவிட்டதாக சொல்வது அப்பட்டமான பொய் என்றால் சரியல்ல.

உங்களுக்கும், உங்கள் அண்ணனுக்கும் ஏற்பட்ட காயங்கள் வேகமாக இருசக்கர வாகனத்தில் சென்றபோது ஏற்பட்டவை என்றாலும், மேற்படி காயங்கள் எதிரிகளால் ஏற்பட்டதில்லை என்றாலும், எதிரிகளால் ஏற்பட்டது என பொய்யாக கூறுகிறீர்கள் என்றால் சரியல்ல. ரோடு சிமெண்ட் ரோடா, தார் ரோடா என்றால் சிமெண்ட் ரோடு ஆகும். சம்பவம் காலை 8.30 மணியளவில் நடந்தது. 9.00 மணிக்கு செஞ்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தோம். மருத்துவமனையில் மருத்துவர்

உங்களை விசாரித்தாரா என்றால் விசாரிக்கவில்லை. உடனடியாக என்னை மேல்சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். முண்டியம்பாக்கம் மருத்துவமனையில் உதவி ஆய்வாளர் நடராஜன் என் அண்ணனிடம் வாக்மூலம் பதிவு செய்தார் என்னிடம் வாக்குமூலம் வாங்கவில்லை. நான் மருத்துவமனையில் 15 நாட்கள் இருந்தேன். என் அண்ணன் மருத்துவமனையில் 3 நாட்கள் இருந்தார்.

உங்களுக்கும் உங்கள் அண்ணனுக்கு ஏற்பட்ட காயங்கள் சம்மந்தமாக மருத்துவ ஆவணங்கள், சிடி ஸ்கேன், எக்ஸ்ரே ஆகியவைகளை போலிசாரிடம் ஒப்படைத்தீர்களா என்றால் இல்லை. விசாரணை அதிகாரி எதிரிகளை உங்கள் முன்பாகவும், உங்கள் அண்ணன் முன்பாக நிற்கவைத்து இவர்கள் தான் உங்களை தாக்கினார்களா என்று அடையாளம் காண்பித்து விசாரணை செய்தாரா என்றால் இல்லை. உங்கள் இருவரின் ரத்தகறை படிந்த துணிகளை போலிசாரிடம் ஒப்படைத்தீர்களா என்றால் இல்லை. உங்கள் குடும்பத்திருக்கும உங்கள் எதிரி குடும்பத்திற்கும் ஏற்கனவே பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். உங்கள் மீது அபுபக்கர் அவதூறை பரப்புவதாக விழுப்புரம் சைபர் கிரைமில் புகார் கொடுத்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

அபுபக்கர் என்பவர் என்மீதும், என் அண்ணன் மீதும் புகார் கொடுத்து அதுசம்மந்தமாக விசாரணைக்கு செஞ்சி காவல்நிலையத்தில் ஆஜரானோம் என்றால் சரிதான். உங்கள் மனைவியை நீங்கள் அடித்து துன்புறுத்தி வீட்டிலேயே வைத்து கொடுமைசெய்ததால் அதுபற்றி எதிரிகளும், 1ம் எதிரியின் தகப்பனாரும் நியாயம் கேட்டதால் ஏற்கனவே நீங்கள் வைத்திருந்த முன்விரோதத்தை கருத்தில்கொண்டு எதிரிகளை தாக்குவதற்காக இருசக்கர வாகனத்தில் சென்று விபத்தில் ஏற்பட்ட காயத்தை வைத்துகொண்டு எதிரிகளை பழிவாங்கவேண்டும் என்பதற்காக கொடுத்த பொய்புகாருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சேதப்பட்ட இருசக்கர வாகனத்தை போலிசாரே வந்துஎடுத்துசென்றனர். அந்த வாகனத்தை காவல்நிலையத்திற்கு சென்று பெற்றுகொண்டோம். அந்த வாகனம் உங்களுடையது என்பதற்கான ஆவணங்கள் போலிசில் ஒப்படைத்தீர்களா என்றால் ஒப்படைத்தோம்.

உண்மையிலேயே எதிரிகள் இருசக்கர வாகனத்தை சேதப்படுத்தியிருந்தால் நீதிமன்றத்தில் தான் வாகனத்தை ஒப்படைத்திருப்பார்கள் என்றால் சரியல்ல. விபத்தில் எற்பட்ட காயம் என்பதால் உதவி ஆய்வாளர் வாகனத்தை உங்களிடமே

கொடுத்துவிட்டார் நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. உங்களுக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.